# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EA.101/2018 in EP.145/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி. சா– 01 ( DW– 01 ) |
| பெயர் | :- | செல்வி க/பெ. ஜெயராஜ் |
| தேதி | :- | 17–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான் மணியனூரில் வசிக்கிறேன். அங்கு சுமார் 50 ஆண்டுகளாக வசிக்கிறேன். வாதிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் 50 ஆண்டுகளாக தெரியும் என்றால் சரிதான். அவர்களுடைய வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே சுமார் 01 கி.மீ தூரம் இருக்கும். வாதிகளின் பூர்வீகம், சொத்து விவரம் பற்றி எனக்குத் தெரியும்.

வாதிகளின் தகப்பனார் முருகேசனின் தகப்பனார் பெயர் ராமசாமி. முருகேசனுக்கு உடன் பிறந்தவர்கள் மூவர். ராமசாமியும் அவருடைய மகன்களும் பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்றால் சரிதான். அசையும் சொத்துக்களை வாய்மொழியாகவும் அசையா சொத்துக்களை பத்திரம் மூலமாகவும் பிரித்துக்கொண்டார்களா என்றால் அது எனக்குத் தெரியாது. ராமசாமியின் மகன்கள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன். அதில் ஏற்கனவே அசையும் சொத்துக்களை வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாகவும் அசையா சொத்துக்களை பத்திரம் மூலம் பிரித்துக்கொள்வதாகவும் வாசகம் உள்ளது

என்றால் சரிதான். முருகேசனுக்கு 9 சவரன் நகையும் பணமும் கொடுத்தனர் என்றால் அது எனக்குத் தெரியாது. பாகப்பிரிவினையில் முருகேசனுக்கு என்ன சொத்து கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நிலமும் வீடும் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

முருகேசனின் தம்பி ஜெயபிரகாஷ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய பாகத்தை அவருடைய மனைவி ஈஸ்வரிக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். ஈஸ்வரியின் பாகத்தை முருகேசன் அவருக்கு பாகப்பிரிவினையில் கொடுத்த நகை பணத்தை வைத்து வாங்கினார் என்றால் அது எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்து ஈஸ்வரியிடமிருந்து முருகேசன் வாங்கிய சொத்தின் ஒருபகுதி என்றால் சரிதான்.

முருகேசன் வண்டிகளின் சக்கரங்களை சரிபார்க்கும் பட்டறை வைத்திருந்தார் என்றால் சரிதான். முருகேசனுக்கு வேறு வருமானம் இல்லை என்றால் சரிதான். 1994-ஆம் ஆண்டு பாகத்தில் வந்த இடத்தில் இருந்த வீட்டை இடித்துவிட்டு 06 வீடுகள் கட்டினார் என்றால் சரிதான். அந்த வீடுகளை கட்ட அடிமனையை வங்கியில் அடைமானம் வைத்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. அடைமானம் வைக்கும்போது வாதிகளும் சேர்ந்து தான் அடைமானம் வைத்தனர் என்றால் அது எனக்குத் தெரியாது.

1990-ஆம் ஆண்டு நெத்திமேடு ஊரில் முருகேசன் ஒரு நிலம் வாங்கினார் என்றால் சரிதான். 06 வீடுகளை கட்ட அந்த நிலத்தை 1995-ஆம் ஆண்டு விற்றார் என்றால் அது எனக்குத் தெரியாது. பூர்வீக சொத்தின் வருமானத்தில் இருந்து அந்த 06 வீடும் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

சின்னையா என்பவர் வாதிகளின் சித்தப்பா. சின்னையாவிடமிருந்து முருகேசன் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தில் இருந்து சொத்து வாங்கினார் என்றால் சரிதான். பகர அதிகார பத்திரம் வாங்கி சாந்தி பெயரில் கிரயம் எழுதினார் என்றால் சரிதான். மற்றொரு பகுதியை பெரியசாமிக்கு விற்றார் என்றால் சரிதான். விற்ற பணத்தை வைத்துதான் வழக்கு சொத்தில் வீடு கட்டினார் என்றால் அது எனக்குத் தெரியாது.

வழக்குச் சொத்தில் உள்ள வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்குத் தெரியாது. பெரியசாமிக்கு விற்று கிடைத்த பணத்தில் இருந்தும் வாதிகளும் சேர்ந்து அடைமானம் வைத்து வாங்கிய கடன் பணத்தில் இருந்தும் 1999-ஆம் ஆண்டு வழக்குச் சொத்தில் இருக்கும் வீட்டை கட்டினார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. வாதிகள்தான் கடனை திருப்பி செலுத்தினார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது.

06 வீடு கட்டியதில் 03 வீட்டை ஆறுமுகம் என்பவருக்கு விற்று -விட்டனர் என்றால் சரிதான். அந்த பணத்தில் இருந்து கடனை அடைத்தனர் என்றால் எனக்குத் தெரியவில்லை. வழக்குச் சொத்து வாதிகளுக்கும் சொந்தமான கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல.

சாந்திக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரியல்ல. வாடகை வருகிறது. மேற்சொன்ன வீடுகளில் இருந்து வரும் வருவாய் என்றால் சரிதான். சாந்தி பெயரில் இருந்த சொத்தை வீடு கட்ட கொடுத்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை வாதிகளும் அவருடைய பெற்றோரும் சேர்ந்து அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான்.

நான் செய்தி தாளில் விளம்பரம் கொடுத்தேன் என்றால் சரிதான். அது பிரதிவாதி தரப்பு 12-ஆம் சான்றாவணமாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை வேறு நபர்கள் வாங்குவதற்கு முயற்சி செய்தார்கள். அதனால் யாரும் வாங்ககூடாது என்பதற்காக விளம்பரம் செய்தேன். விளம்பரத்தில் சொல்லியுள்ள சொத்து 971 சதுரடி சொத்து. விளம்பரத்தில் 1437 சதுரடியில் உள்ள 06 வீட்டையும் வாங்ககூடாது என்று விளம்பரம் செய்தேன் என்றால் எங்கள் சொத்திற்குதான் விளம்பரம் கொடுத்தோம்.

நான் ஒப்பந்தம் செய்த சமயத்தில் வாதிகள் அனைவரும் உரிமை வயதை அடைந்திருந்தனர் என்றால் இல்லை. ஒப்பந்தம் 2006- ஆம் ஆண்டு போடப்பட்டது. அப்போது வாதிகள் உரிமை வயதை அடைந்திருந்தனர் என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகளின் பாதுகாவலர் என்ற தகுநிலையில் அவர்களின் பெற்றோர் ஒப்பந்தம் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள்மீது தீர்ப்பாணை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்காக நீதிமன்றம் விற்பனை பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

வழக்குச் சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றும் வாதிகளுக்கு அதில் தலைக்கு ¼ பங்கு உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய விற்பனை பத்திரம் வாதிகளின் பாக உரிமையை கட்டுப் -படுத்தாது என்றால் சரியல்ல. நான் வாங்கி சொத்தில்தான் வாதிகள் வசிக்கின்றனர் என்றால் சரிதான். வாதிகள் அவர்களுக்கு சொந்தமான சொத்தில் உள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து சுவாதீனம் பெறுவதற்கு

எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.